## ஒரு பார்வை - பகுதி 1

**பிரபஞ்சத்தின் ஆட்சி அல்லாஹ்வுக்கு மட்டுமே சொந்தமானது என்பதை ஸூரா அல்முல்க் மிக அழகாக வெளிப்படுத்துகிறது. அதில் எந்த பலவீனத்தையும், குறையையும் நீங்கள் காண முடியாது; அதன் முழுக் கட்டுப்பாடும் அல்லாஹ்விடம் உள்ளது. முஹம்மது நபி (ஸல்) மிக உயர்ந்த ஒழுக்க பண்புடையவர்கள் என்று தெரிவித்து, ஸூரா அல்கலம் தொடங்குகிறது. தர்மம் செய்ய விரும்பாத தோட்டத்தின் உரிமையாளர்களின் சம்பவம் மூலம் அல்லாஹ் எவ்வாறு அனைத்தையும் கவனித்து, கட்டுப்படுத்துகிறான் என்பதை எடுத்துக்காட்டுகிறது.**

## தராவிஹ் - 25: (ரக்அத் 1 முதல் 4)

### ஸூரா - 67, அல்முல்க்; வசனம்: 1 - 30; பிரிவு: 1 - 2

1. **யாருடைய கையில் ஆட்சி இருக்கின்றதோ, அந்த அல்லாஹ்வே அருள்மிக்கவன்; அவன் எல்லாப் பொருட்களின் மீதும் சக்தி பெற்றவனாக இருக்கின்றான். (ஸூரா - அல்முல்க்; பிரிவு: 1)**

2. **உங்களில் நல்ல முறையில் செயலாற்றுபவர் யார் என்று உங்களை சோதிப்பதற்காக அவன் மரணத்தையும், வாழ்வையும் படைத்தான். மேலும், அவன் வல்லமை மிக்கவன்; மிக மன்னிப்பவன். (ஸூரா - அல்முல்க்; பிரிவு: 1)**

3. **தம் இறைவனை நிராகரிப்போருக்கு நரக வேதனையே கிடைக்கும். அதுவே மிகக் கெட்ட இடமாகும். (ஸூரா - அல்முல்க்; பிரிவு: 1)**

4. **அதில் அவர்கள் போடப்படப்படும்போது, அதன் கடும் இரைச்சலைக் கேட்பார்கள். அப்பொழுது அது கொதித்துக்**

கொண்டிருக்கும். அது (நிராகரிப்பவர்கள் மீதான) கோபத்தால் வெடித்து பிளந்திடப் பார்க்கும். (ஸூரா - அல்முல்க்; பிரிவு: 1)

5. வானத்தில் இருக்கும் அல்லாஹ், உங்களை பூமியில் புதைந்துவிடுமாறு செய்திட மாட்டான் என்ற நீங்கள் நிம்மதியாக இருக்கிறீர்களா? அல்லது உங்கள் மீது கல்மாரி மழையைப் பொழியமாட்டான் என்று நிம்மதியாக இருக்கிறீர்களா? (ஸூரா - அல்முல்க்; பிரிவு: 2)

6. உங்களுக்கு மேல் பறக்கின்ற பறவைகளை கவனிக்கவில்லையா? அவைகள் இறக்கையை விரித்த வண்ணமும், மூடிய வண்ணமும் பறந்து திரிகின்றன. அந்த அருளாளன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அதனை கீழே விழாமல் தடுக்கவில்லை. நிச்சயமாக அவன் ஒவ்வொரு பொருளையும் கூர்ந்து கவனிப்பவனாக இருக்கின்றான். (ஸூரா - அல்முல்க்; பிரிவு: 2)

7. “அல்லாஹ்தான் உங்களைப் படைத்தான். உங்களுக்குக் கேட்கும் திறனையும், பார்வைத் திறனையும், இதயங்களையும் அவன் வழங்கினான். ஆனால் நீங்கள் மிகக் குறைவாகவே நன்றி செலுத்துகின்றீர்கள்” என்று நபியே நீர் கூறுவீராக! (ஸூரா - அல்முல்க்; பிரிவு: 2)

8. "உங்களிடமுள்ள தண்ணீர் முழுவதும் பூமியில் உறிஞ்சப்பட்டு விட்டால், பொங்கும் நீரூற்றை கொண்டு வருபவன் யார் என சிந்தித்துப்பார்த்தீர்களா?” என்று நபியே நீர் கேட்பீராக! (ஸூரா - அல்முல்க்; பிரிவு: 2)

**ஸூரா - 68, அல்கலம்; வசனம்: 1 - 52; பிரிவு: 1 - 2**

9. நூன்! எழுதுகோலின் மீது சத்தியமாக! அவர்கள் - (வானவர்கள் பதிவேட்டில்) எதனை எழுதினார்களோ, அதன் மீதும்

சத்தியமாக! நபியே! உம்முடைய இறைவன் அருளால், நீர் பைத்தியக்காரர் அல்லர். (ஸூரா - அல்கலம்; பிரிவு: 1)

10. மேலும், உமக்கு முடிவில்லாத நற்கூலி நிச்சயமாக இருக்கிறது. (ஸூரா - அல்கலம்; பிரிவு: 1)

11. மற்றும், (நபியே!) நிச்சயமாக நீர் மிக உயர்ந்த, மகத்தான நற்குணம் உடையவராக இருக்கின்றீர். (ஸூரா - அல்கலம்; பிரிவு: 1)

12. தோட்டக்காரர்கள் நிகழ்வு இங்கு நினைவு கூறப்படுகிறது. (அவர்களுடைய தந்தை இறந்தபின்பு, அத்தோட்டம் அவர்களுக்கு உரிமையானது). அடுத்த நாள் அதிகாலை அதை அறுவடை செய்வோம் என்று சத்தியம் செய்தனர். (ஸூரா - அல்கலம்; பிரிவு: 1)

13. அப்போது அவர்கள் 'இன்ஷா அல்லாஹ் - இறைவன் நாடினால்' என்று குறிப்பிடவில்லை. (ஸூரா - அல்கலம்; பிரிவு: 1)

14. எனவே, அவர்கள் தூங்கிக் கொண்டிருந்த போது இறைவனிடமிருந்து வலம்வந்த ஒரு பேரிடர் (நெருப்பு) தோட்டத்தைச் சுற்றி வளைத்துக்கொண்டது. மறுநாள் காலை அது கருஞ்சாம்பலைப் போலாகிவிட்டது. (முன்னரே அறுவடை செய்தது போல ஒன்றுமில்லாமல் ஆகிவிட்டது). (ஸூரா - அல்கலம்; பிரிவு: 1)

15. “நீங்கள் அறுவடை செய்வதாக இருந்தால், அதிகாலையிலேயே செல்லுங்கள்”, என்று மறுநாள் காலை ஒருவர் மற்றொருவரை அழைத்துக் கொண்டிருந்தார். "இன்று தோட்டத்தில் எந்த ஏழையும் உங்களிடம் வந்துவிடக் கூடாது"

என்று மெதுவாகப் பேசியவர்களாக நடந்து சென்றனர். (ஸூரா - அல்கலம்; பிரிவு: 1)

16. அவர்கள் தங்களது கஞ்சத்தனமான எண்ணத்துடன், ஏழைகளுக்கு கொடுக்கக்கூடாது என்ற உறுதியுடன், தங்களிடமே அறுவடை செய்ய எல்லா சக்தியும் உள்ளது என நினைத்துச் சென்றனர். (ஸூரா - அல்கலம்; பிரிவு: 1)

17. ஆனால், அவர்கள் தோட்டத்தின் நிலையைப் பார்த்தபோது, “நிச்சயமாக நாம் வழி தவறி வந்து விட்டோம்; இல்லை இல்லை! நாம் இழப்புக்குரிவர்களாக ஆகிவிட்டோம்” என்று கதறினர். (ஸூரா - அல்கலம்; பிரிவு: 1)

18. அவர்களில் நடுநிலையாக இருந்த ஒருவர், “(இன்ஷாஅல்லா - அல்லாஹ் நாடினால்’ என்று கூறி) நீங்கள் அல்லாஹ்வைத் துதிக்கமாட்டீர்களா என்று நான் முன்பே கூறவில்லையா?" என்று கேட்டார். (ஸூரா - அல்கலம்; பிரிவு: 1)

19. பின்னர் அவர்கள், “எங்கள் இறைவன் தூயவன்; நாங்கள் தான் நிச்சயமாக அநியாயம் செய்துவிட்டோம்" என்று கூறினர். மேலும், அவர்களில் சிலர், சிலர்மீது பழிபோட்டுக்கொண்டனர். (ஸூரா - அல்கலம்; பிரிவு: 1)

20. (அல்லாஹ் அளிக்கும்) வேதனை இவ்வாறுதான் இருக்கும். மறுமையின் வேதனை (இதைவிட) மிகவும் பெரிதாகும். இதை அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டாமா? (ஸூரா - அல்கலம்; பிரிவு: 1)

21. கியாமத் நாளில் பாவிகள் தண்டனைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் போது, அல்லாஹ்வுக்கு ஸஜ்தா செய்யுமாறு அவர்கள் அழைக்கப்படுவார்கள். ஆனால் அவர்களுக்கு ஸஜ்தா செய்ய சக்தி இருக்காது. (ஸூரா - அல்கலம்; பிரிவு: 2)

22. பயத்தால் அவர்களின் பார்வை கீழ்நோக்கித் தாழ்ந்துவிடும். ஏனெனில் உலகில் அவர்கள் சுகமாக இருந்த போது அல்லாஹ்வுக்கு ஸஜ்தா செய்ய அழைக்கப்பட்டனர். ஆனால் அங்கு ஸஜ்தா செய்ய மறுத்து விட்டனர். (ஸூரா - அல்கலம்; பிரிவு: 2)

23. இந்த குர்ஆன் அகில உலக மக்களுக்கும் உபதேசமே தவிர வேறொன்றுமில்லை. (ஸூரா - அல்கலம்; பிரிவு: 2)

## ஒரு பார்வை - பகுதி 2

தீர்ப்பு வழங்கும் நாளின் விரிவான காட்சிகளை ஸூரா அல்ஹாக்கா மற்றும் ஸூரா அல்மஆரிஜ் மிக தத்ருபமாக விளக்குகிறது. மேலும் ஸூரா அல்மஆரிஜ்ஜில் சுவர்க்கத்தை அடைகின்ற மக்களின் பண்புகள் பற்றி விரிவாக கூறப்பட்டுள்ளது.

## தராவிஹ் - 25: (ரக்அத் 5 முதல் 8)

### ஸூரா - 69, அல்ஹாக்கா; வசனம்: 1 - 52; பிரிவு: 1 - 2

1. உறுதியாக நடக்கவிருப்பது, அது என்ன? உறுதியாக நடக்கவிருப்பது (கியாமத் நாள்) என்னவென்று நபியே! உமக்குத் தெரியுமா? (ஸூரா - அல்ஹாக்கா; பிரிவு: 1)

2. தீர்ப்பு வழங்கும் நாளின் காட்சிகள் விளக்கப்படுகிறது: (ஸூரா - அல்ஹாக்கா; பிரிவு: 1)

   - ஒரே ஒரு தடவை எக்காளம் (ஸூர்) ஊதப்படும்.
   - பூமியும், மலைகளும் பெயர்க்கப்பட்டு பின்னர் ஒன்றோடு ஒன்று மோதி அவ்விரண்டும் சுக்குநூறாக நொறுக்கப்படும்.
   - வானம் பிளந்து விடும். அப்போது அது வலுவிழந்துவிடும்.
   - வானவர்கள் அதன் ஓரங்களில் இருப்பார்கள். மேலும் அவர்களில் எட்டு வானவர்கள் அல்லாஹ்வின் அர்ஷை தங்களுக்கு மேல் சுமந்து கொண்டிருப்பார்கள்.
   - அந்நாளில், உங்களுடைய இறைவன் முன்பாக நீங்கள் நிறுத்தப்படுவீர்கள். உங்களுடைய இரகசியங்கள் எதுவும் மறைவாக இருக்காது.

3. யாருடைய வினைப் பதிவேடு அவருடைய வலக்கையில் கொடுக்கப்படுமோ, அவர் (மற்றவர்களிடம்), “இதோ! என்

வினைப் பதிவேட்டைப் படித்துப்பாருங்கள். நிச்சயமாக நான் விசாரணையைச் சந்திக்கக்கூடியவன்தான் என்று உறுதியாக நம்பிக் கொண்டிருந்தேன்" எனக் கூறுவார். (ஸூரா - அல்ஹாக்கா; பிரிவு: 1)

4. அவர் திருப்தியான சுக வாழ்க்கையில், உயர்ந்த சுவர்க்கச் சோலையில் இருப்பார். அதனுடைய கனிகள் அவருக்கு நெருக்கமாக இருக்கும். (ஸூரா - அல்ஹாக்கா; பிரிவு: 1)

5. ஆனால் யாருடைய வினைப் பதிவேடு அவனுடைய இடக்கையில் கொடுக்கப்படுமோ அவன் கூறுவான், "அந்தோ! என்னுடைய வினைப் பதிவேடு எனக்குக் கொடுக்கப்படாமல் இருந்திருக்கக் கூடாதா! மேலும் என் கேள்வி கணக்கு என்ன என்று எனக்குத் தெரியாமலே போயிருக்கக் கூடாதா" எனக் கூறுவான். (ஸூரா - அல்ஹாக்கா; பிரிவு: 1)

6. "(நான் இறந்த போதே) இது முற்றிலும் முடிந்திருக்கக் கூடாதா? என்னுடைய செல்வம் எனக்கு எந்த பலனையும் அளிக்கவில்லையே! என்னுடைய அதிகாரம் என்னை விட்டும் அழிந்து விட்டதே" என்று புலம்புவான். (ஸூரா - அல்ஹாக்கா; பிரிவு: 1)

7. அப்போது, "அவனைப் பிடியுங்கள். அவனுக்கு விலங்கிடுங்கள்" என்று கூறப்படும். (ஸூரா - அல்ஹாக்கா; பிரிவு: 1)

8. "அவனைப் பிடித்து நரகத்தில் தள்ளுங்கள். பின்னர், 70 முழம் நீளமுள்ள சங்கிலியால் அவனைக் கட்டுங்கள்" (ஸூரா - அல்ஹாக்கா; பிரிவு: 1)

9. நிச்சயமாக, அவன் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்ளாதிருந்தான். ஏழைகளுக்கு உணவளிப்பதில் அக்கறைக் காட்டாமல் இருந்தான். (ஸூரா - அல்ஹாக்கா; பிரிவு: 1)

10. இன்று அவனுக்கு இங்கு நண்பன் யாருமில்லை. சீழ் சலத்தைத் தவிர அவனுக்கு இங்கு வேறு உணவில்லை. பாவிகளைத் தவிர வேறு யாரும் அதனை உட்கொள்ள மாட்டார்கள். (ஸூரா - அல்ஹாக்கா; பிரிவு: 1)

11. நிச்சயமாக இந்த குர்ஆன், பயபக்தியுடையோருக்கு நினைவூட்டலாகும். நிச்சயமாக இதுவே உறுதியான உண்மையாகும். எனவே, (நபியே!) மகத்தான உமது இறைவனின் பெயரைத் துதிப்பீராக! (ஸூரா - அல்ஹாக்கா; பிரிவு: 2)

**ஸூரா - 70, அல்மஆரிஜ்; வசனம்: 1 - 44; பிரிவு: 1 - 2**

1. மீண்டும் எழுப்பப்படும் மறுமை நாளின் காட்சிகள் இங்கு விளக்கப்படுகின்றன. (ஸூரா - அல்மஆரிஜ்; பிரிவு: 1)

- அந்நாளில் வானம், உருகிய செம்பு போல் ஆகிவிடும். மலைகள், பஞ்சைப் போல் லேசாக ஆகிவிடும்.
- நெருங்கிய நண்பர்கள் ஒருவருக்கொருவர் எதிரெதிரே பார்த்துக் கொண்டாலும், அவர்கள் எதைப் பற்றியும் கேட்டுக் கொள்ள மாட்டார்கள்.
- குற்றவாளிகள் (நிராகரித்தோர்கள்) தன்னைத் தண்டனையிலிருந்து பாதுகாக்க, தன் குழந்தை, மனைவி, தன் சகோதரன், தன் உறவினர்கள், மற்றும் பூமியிலுள்ள அனைத்தையும் நஷ்டஈடாக வழங்க முன் வருவார்கள்.
- ஆயினும் அது நடக்காது. கொழுந்து விட்டெறியும் நரகம் அவர்களுக்கு உண்டு. அந்த நெருப்பு, உடலின் தோலை உரித்துவிடும்.
- அந்த நெருப்பு, உண்மையைப் புறக்கணித்து, உலக வாழ்க்கையின் பக்கம் பின்வாங்கிச் சென்றவரையும்,

செல்வத்தைச் சேகரித்து முடிந்து வைத்துக் கொண்டவரையும் அழைக்கும்.

2. சுவர்க்கத்தை அடைகின்ற மக்கள் பற்றி கூறப்பட்டுள்ளது. (ஸூரா - அல்மஆரிஜ்; பிரிவு: 1)

- அவர்கள் தொழுகையை நிறைவேற்றி, தம் தொழுகையை நிரந்தரமாக பேணி வருவார்கள்.
- தங்களுடைய செல்வத்தில் யாசிப்போருக்கும், திக்கற்றோர்க்கும் குறிப்பிட்ட பங்கு உண்டு.
- அவர்கள் தீர்ப்பு வழங்கும் நாளினை ஏற்றுக் கொண்டவர்கள்; தங்களுடைய இறைவனின் தண்டனைக்கு பயந்தவர்கள்.
- அவர்கள் தங்கள் கற்பைப் பேணுவார்கள். தங்களுடைய மனைவிகள், மற்றும் வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்ட அடிமைகளைத் தவிர மற்றவர்களிடம் தங்களின் மறைவிடத்தைப் பாதுகாத்தவர்கள்.
- தங்களுடைய சத்தியங்களையும், வாக்குறுதிகளையும் பேணுகின்றவர்கள்.
- தங்களுடைய சாட்சியங்கள் மீது உறுதியாக இருப்பவர்கள். மேலும் அவர்களுடைய தொழுகைகளில் பேணுதலாக இருப்பவர்கள்.

இத்தகைய மக்களே சுவர்க்கசோலைகளில் மரியாதை செய்யப்படுவார்கள்.

## ஒரு பார்வை - பகுதி 3

நூஹ் (அலை) தன் மக்களிடம் அழைப்பு விடுத்ததையும், தனது அனைத்து முயற்சிகளும் பலன் அளிக்காததால், இறுதியாக அல்லாஹ்விடம் வேண்டியதையும் ஸூரா நூஹ் அழகாக விவரிக்கிறது. குர்ஆனைக் கேட்டு இஸ்லாத்தைத் தழுவிய ஜின்கள் குழுவின் அழகான உரையை ஸூரா அல்ஜின் விவரிக்கிறது. தொழுகைக்காக இரவில் எழுந்திருப்பதால், மனிதன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும், அல்லாஹ்வின் வார்த்தைகளைப் புரிந்து கொள்ளவும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதை ஸூரா அல்முஜ்ஜம்மில் எடுத்துக்காட்டுகிறது. உங்களால் முடிந்தவரை குர்ஆனை ஓதுங்கள். மேலும் தொழுகையை நிலை நாட்டுங்கள். ஜகாத்தைக் கொடுங்கள்.

## தராவிஹ் - 25: (ரக்அத் 9 முதல் 12)

### ஸூரா - 71, நூஹ்; வசனம்: 1 - 28; பிரிவு: 1 - 2

1. நூஹ் (அலை) கூறினார்கள்: “என் சமூகத்தார்களே! நிச்சயமாக நான் உங்களுக்கு தெளிவாக எச்சரிக்கை செய்பவனாக அனுப்பப்பட்டுள்ளேன். நீங்கள் அல்லாஹ்வையே வணங்குங்கள்; அவனுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள். இதனால் உங்களுடைய பாவங்களை அவன் மன்னிப்பான்; ஒரு குறிப்பிட்ட தவணை வரை அவன் உங்களுக்கு அவகாசமளிப்பான். (ஸூரா - நூஹ்; பிரிவு: 1)

2. (நூஹ் (அலை) தனது மக்களை 950 ஆண்டுகளாக நேர்வழிக்கு அழைத்தார்கள். அம்முயற்சி பலனளிக்காமல் போனதால்) நூஹ் (அலை), “என் இறைவா! நிச்சயமாக, நான் என் சமூகத்தாரை இரவு பகலாக (நேர்வழிக்கு) அழைத்தேன். ஆனால் என் அழைப்பு அவர்களை அதிகமாக வெருண்டு ஓடவே செய்துள்ளது” என கூறினார்கள். (ஸூரா - நூஹ்; பிரிவு: 1)

3. நூஹ் (அலை) கூறினார்கள்: "என்னுடைய மக்கள் எனக்கு மாறு செய்துவிட்டனர். யாருடைய குழந்தைச் செல்வமும், பொருட்செல்வமும் நஷ்டத்தைத் தவிர வேறு எந்தப் பலனையும் தராதோ, அவரையே இவர்கள் பின்பற்றுகின்றனர்". (ஸூரா - நூஹ்; பிரிவு: 2)

4. ஆகவே, அவர்கள் தம் பாவங்களினால் வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டு, பின்னால் நரக நெருப்பிலும் புகுத்தப்பட்டனர். (ஸூரா - நூஹ்; பிரிவு: 2)

5. நூஹ் (அலை) அல்லாஹ்விடம், "என்னுடைய இறைவா! பூமியில் காஃபிர்களை ஒருவரைக்கூட விட்டு விடாதே! அப்படி நீ விட்டுவிட்டால், உன்னுடைய அடியார்களை அவர்கள் வழி கெடுத்திடுவார்கள். நிராகரிப்பவனையும் பாவிகளையும்தான் அவர்கள் பெற்றெடுப்பார்கள்" என்று பிரார்த்தித்தார்கள். (ஸூரா - நூஹ்; பிரிவு: 2)

**ஸூரா - 72, அல்ஜின்; வசனம்: 1 - 28; பிரிவு: 1 - 2**

6. நபியே! கூறுவீராக! எனக்கு வஹீ - வேதஅறிவிப்பு வந்துள்ளது. நிச்சயமாக ஜின்களில் சிலர் இந்தக் குர்ஆனைக் செவியுற்றனர். பிறகு அவர்கள் தம் கூட்டத்தினரிடம் சென்று "நாங்கள் அற்புதமான குர்ஆனை செவிமடித்தோம். அது நேர்வழி காட்டுகிறது. எனவே அதன்மீது நாங்கள் நம்பிக்கை கொண்டோம். இனி ஒருபோதும் இறைவனுக்கு இணைவைக்க மாட்டோம்" என்று கூறினர். (ஸூரா - அல்ஜின்; பிரிவு: 1)

7. "எங்களிலுள்ள முட்டாள்கள், அல்லாஹ்வைப் பற்றி பொய்யான செய்திகளைக் கூறி வந்தனர். மனிதர்களும், ஜின்களும் அல்லாஹ்வின் மீது பொய் சொல்ல மாட்டார்கள் என்றே இதுவரை நினைத்திருந்தோம்" என்றும் கூறினார்கள். (ஸூரா - அல்ஜின்; பிரிவு: 1)

8. **சில மனிதர்கள், சில ஜின்களிடம் பாதுகாப்புத் தேடிவந்தனர். இதன்மூலம் அந்த ஜின்களின் ஆணவம் அதிகரித்துவிட்டது. (ஸூரா - அல்ஜின்; பிரிவு: 1)**

9. **மேலும் தம் கூட்டத்தை நோக்கி ஜின்கள், "நிச்சயமாக நம்மில் நல்லவர்களும் முஸ்லீம்களாக உள்ளனர். எல்லை மீறியவர்களும் உள்ளனர். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களே நேர்வழியை தேடிக்கொண்டனர். எல்லை மீறியவர்களோ நரகத்தின் எரிபொருளாய் ஆகிவிட்டனர்" எனக் கூறினர். (ஸூரா - அல்ஜின்; பிரிவு: 1)**

**ஸூரா - 73, அல்முஜ்ஜம்மில்; வசனம்: 1 - 20; பிரிவு: 1 - 2**

10. **போர்வை போர்த்தியவரே! - முஜ்ஜம்மில் அவர்களே! (இது நபியின் பெயர்களில் ஒன்று). (ஸூரா - அல்முஜ்ஜம்மில்; பிரிவு: 1)**

11. **இரவில் சொற்ப நேரம் தவிர மீதி நேரத்தில் நின்று வணங்குவீராக! அதாவது இரவில் பாதி அல்லது அதைவிடக் குறைவாக அல்லது அதைவிட சிறிது அதிகமாக தொழுவீராக! குர்ஆனை நிறுத்தித் தெளிவாக ஓதுவீராக! (ஸூரா - அல்முஜ்ஜம்மில்; பிரிவு: 1)**

12. **நிச்சயமாக, இரவில் எழுந்திருந்து வணங்குவது மனதை நன்கு ஒருமுகப்படுத்தும். மேலும், அல்லாஹ்வுடைய வார்த்தைகளை (குர்ஆனை) ஓதுவதை அதிகம் செம்மைப்படுத்தும். (ஸூரா - அல்முஜ்ஜம்மில்; பிரிவு: 1)**

13. **உம்முடைய இறைவனின் திருப்பெயரை தியானிப்பீராக! அவனிடமே சரணடைவீராக! (ஸூரா - அல்முஜ்ஜம்மில்; பிரிவு: 1)**

14. நிச்சயமாக இது நினைவூட்டும் நல்லுபதேசமாகும். ஆகவே, யார் விரும்புகிறாரோ, அவர் தம்முடைய இறைவனை நோக்கிய பாதையை எடுத்துக் கொள்ளட்டும். (ஸூரா - அல்முஜ்ஜம்மில்; பிரிவு: 1)

15. நபியே! நீரும் உம்முடன் இருக்கும் ஒரு குழுவினரும், இரவின் மூன்றில் இரு பகுதியோ, சரிபாதியோ, அல்லது மூன்றில் ஒருபகுதியோ நின்று வணங்குவதை அல்லாஹ் நன்கு அறிவான். (ஸூரா - அல்முஜ்ஜம்மில்; பிரிவு: 2)

16. தொடர்ந்து அந்த அளவுக்கு வணங்குவதற்கு உங்களால் முடியாது என்பதையும் அல்லாஹ் அறிவான். அதனால் உங்களுக்கு அவன் பாவமன்னிப்பு வழங்கி விட்டான். ஆகவே குர்ஆனிலிருந்து உங்களால் முடிந்த அளவு, ஓதிக் கொள்ளுங்கள். (ஸூரா - அல்முஜ்ஜம்மில்; பிரிவு: 2)

17. (ஐந்து நேர) தொழுகையை நிலை நாட்டுங்கள். ஜகாத்தைக் கொடுங்கள். மேலும் (தேவைப்படுவோருக்கு) அல்லாஹ்வுக்காக அழகிய கடனை வழங்குங்கள். உங்களுக்காக முன்கூட்டியே நீங்கள் அனுப்பிவைக்கும் எந்த நன்மையானாலும் அதைச் சிறந்த மகத்தான பிரதிபலனாக அல்லாஹ்விடம் நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள். (ஸூரா - அல்முஜ்ஜம்மில்; பிரிவு: 2).

## ஒரு பார்வை - பகுதி 4

**ஸூரா அல்முத்தஸ்ஸிர் மூலம் நபி (ஸல்) அவர்கள் தூய்மையாக இருக்கவும், பொறுமையை கடைபிடிக்கவும் அறிவுரைகள் வழங்கப்படுகிறது. வலீத் பின் அல்முஃகீரா என்ற குறைஷி, நபி (ஸல்) அவர்களுக்கு எதிரான கருத்தை உருவாக்கிய சம்பவத்தையும் இது விவரிக்கிறது. ஸூரா அல்கியாமாவில், நியாயத்தீர்ப்பு நாளின் யதார்த்தத்தையும், மனிதனின் மரணப் படுக்கையின் நிலைமை குறித்தும் விளக்கி, இரண்டிலிருந்தும் மனிதன் தப்ப முடியாது என்பதை உணர்த்துகிறது.**

## தராவிஹ் - 25: (ரக்அத் 13 முதல் 16)

### ஸூரா - 74, அல்முத்தஸ்ஸிர்; வசனம்: 1 - 56; பிரிவு: 1 - 2

**பின்னணி:**

**முதலில் நபி (ஸல்) அவர்களுக்கு இறக்கப்பட்ட வஹீ, ஸூரா அல்அலக்கில் உள்ள முதல் ஐந்து வசனங்களாகும். அதன் பின் இறக்கப்பட்டது ஸூரா அல்முத்தஸ்ஸிர்ரிலுள்ள முதல் ஏழு வசனங்களாகும். இதில் அல்லாஹ், நபி (ஸல்) அவர்களை மக்களுக்கு அவர்கள் வாழும் வாழ்க்கை முறையை சுட்டிக்காட்டி, அச்சமூட்டி எச்சரிக்கை செய்யுமாறும், அல்லாஹ்வின் மகிமையை எடுத்துக் கூறுமாறும் சொல்கிறான்.**

**நபி (ஸல்) மக்களிடம் அல்லாஹ்வின் வசனங்களை எடுத்துச் சென்றபோது, மக்கத்து குரைஷிகள் ஏற்கமறுத்தனர். இதனால் பெரும் எதிர்ப்பு கிளம்பியது. இவ்வாறு இருந்தபோது, ஹஜ் யாத்திரைக்கான காலம் நெருங்கியது. அப்போது அரபு தேசத்தின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் வரும்போது, நபி (ஸல்) அவர்கள் இறைதூதை பிரச்சாரம் செய்தால், பல பகுதி மக்களிடமும் அது சென்றடையும் என்பதால், மக்கத்து காஃபிர்கள் கலக்கமடைந்தனர்.**

ஆதலால் அவர்கள் ஒரு கூட்டம் போட்டு இது பற்றி விவாதித்தனர். அதில் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக பிரச்சாரம் செய்யவேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. அப்போது வலீத் பின் அல்முஃகீரா என்னும் குரைஷி, "நாம் ஒவ்வொருவரும் மாறுபட்ட வெவ்வேறான கருத்துக்களை முஹம்மதுக்கு எதிராக கூறினால், மக்கள் மனதில் நம் மீதுள்ள நம்பிக்கை குறைந்துவிடும். அதனால், நம் அனைவரும் ஒரே கருத்தையே மக்களிடம் எடுத்துச் செல்லவேண்டும்" என முன்வைத்தான். அதை அனைவரும் ஏற்றுக்கொண்டு, அவனையே ஒரு வலிமையான கருத்தை நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக எடுத்துரைக்குமாறு கேட்டனர். அவனும் சிறிது அவகாசம் எடுத்துவிட்டு, இந்த கருத்தை கூறினான்: "முஹம்மது ஒரு மந்திரவாதி. அவர் தனது கருத்தின் மூலம் நம்மை பிரிக்கப் பார்க்கின்றார். நம்மை நம்முடைய தந்தையிடமிருந்தும், சகோதரர்களிடமிருந்தும், மனைவி, பிள்ளைகள் மற்றும் நம் குடும்பத்தினரிடமிருந்தும் பிரிக்க பார்க்கின்றார்". இக்கருத்தை குரைஷிகள் ஆமோதித்து, மக்காவிற்கு வரும் ஹஜ் பயணிகளிடம் பிரச்சாரம் செய்தனர். இந்த நிகழ்வும், வலீத் பின் முஃகீராவின் சதித்திட்டமும் இந்த வசனங்களில் கூறப்பட்டுள்ளது, அவனுக்கு கடும் தண்டனை உண்டு என்றும் கூறப்பட்டுள்ளது.

1. முத்தஸ்ஸிர் அவர்களே! (மேலாடையை போர்த்தியிருப்பவரே! எழுந்திருப்பீராக! (மக்களுக்கு) எச்சரிக்கை செய்வீராக! (ஸூரா - அல்முத்தஸ்ஸிர்; பிரிவு: 1)

2. உம் இறைவனின் மகத்துவத்தை எடுத்துரைப்பீராக! உம் ஆடைகளைத் தூய்மையாக ஆக்கி வைத்துக் கொள்வீராக! அசுத்தத்திலிருந்து விலகி இருப்பீராக! அதிக ஆதாயத்தை எதிர்பார்த்து மற்றவர்களுக்கு உதவி செய்யாதீர்! இன்னும், உம் இறைவனுக்காகப் பொறுமையுடன் இருப்பீராக! (ஸூரா - அல்முத்தஸ்ஸிர்; பிரிவு: 1)

3. எக்காளம் ஊதப்படும் (மறுமை) நாள் மிகக்கடுமையான நாளாகும். கா∴பிர்களுக்கு (அந்நாள்) இலகுவானதாக இருக்காது. (ஸூரா - அல்முத்தஸ்ஸிர்; பிரிவு: 1)

4. வானவர்களைத்தான் நரகத்தின் காவலர்களாய் அல்லாஹ் நியமித்துள்ளான். (ஸூரா - அல்முத்தஸ்ஸிர்; பிரிவு: 1)

5. ஓவ்வொரு மனிதனும் அவனவன் சம்பாதித்த செயல்களுக்குப் பிணையாக்கப்படுவான் வலப்புறத்தாரைத் தவிர. அவர்கள் தங்ககளது நற்செயல்களால் சுவனச் சோலைகளில் இருப்பர். (ஸூரா - அல்முத்தஸ்ஸிர்; பிரிவு: 2)

6. அவர்கள் குற்றவாளிகளிடம், “உங்களை நரகத்தில் நுழைய வைத்தது எது?” என்று கேட்பார்கள். (ஸூரா - அல்முத்தஸ்ஸிர்; பிரிவு: 2)

7. அவர்கள், "நாங்கள் தொழுகையாளிகளாய் இருக்கவில்லை. ஏழைகளுக்கு உணவும் அளிக்கவில்லை. இறைமறுப்பிலும், ஏளனத்திலும் மூழ்கி இருந்தவர்களோடு நாங்களும் சேர்ந்து இருந்தோம். இந்த நியாயத் தீர்ப்பு நாளை நாங்கள் நம்ப மறுத்துக் கொண்டிருந்தோம்", என்று கூறுவர். (ஸூரா - அல்முத்தஸ்ஸிர்; பிரிவு: 2)

**ஸூரா - 75, அல்கியாமா; வசனம்: 1 - 40; பிரிவு: 1 - 2**

8. அல்லாஹ் மறுமை நாளின் மீதும், பழித்துரைக்கும் மனத்தின் மீதும் சத்தியம் செய்து சொல்கிறான். (ஸூரா - அல்கியாமா; பிரிவு: 1)

9. (இறந்து மக்கிப்போன) மனிதனின் எலும்புகளை நாம் ஒன்று சேர்க்கவே மாட்டோம் என்று மனிதன் எண்ணுகின்றானா? (ஸூரா - அல்கியாமா; பிரிவு: 1)

10. அவ்வாறன்று! அல்லாஹ், மனிதனின் விரல் நுனிகளையும் மிகச்சரியாக ஒன்று சேர்க்கும் சக்தியுள்ளவன். (ஸூரா - அல்கியாமா; பிரிவு: 1)

11. மனித உயிர் பிரியும் நேரத்தில், அது அவனுடைய தொண்டைக்குழியை வந்தடையும் போது, “உதவி செய்ய யாரேனும் இங்கே இருக்கிறீர்களா?” என்று கேட்கப்படும். (ஸூரா - அல்கியாமா; பிரிவு: 1)

12. உலகத்திலிருந்து பிரியும் நேரம் வந்து விட்டதென்று மனிதன் உறுதிகொள்ளும்போது, (மரண அவதியில்) காலோடு கால் பின்னிக் கொள்ளும்போது, அந்நாளில், உம்முடைய இறைவனின் பக்கமே அவன் இழுத்துச் செல்லுப்படுவான். (ஸூரா - அல்கியாமா; பிரிவு: 1)

13. மனிதா! உனக்கு கேடுதான்! மீண்டும் கேடுதான்! உனக்கு கேடுதான்! மறுபடியும் கேடுதான்! எவ்வித கேள்வி கணக்குமின்றி வெறுமனே விடப்படுவான் என மனிதன் நினைத்துக் கொண்டானா? (ஸூரா - அல்கியாமா; பிரிவு: 2)

14. கர்ப்பப்பையில் சொட்டுகின்ற விந்துத் துளியாக அவன் இருக்கவில்லையா? பிறகு அவன் இரத்தக்கட்டியாய் ஆகியிருந்தான். பின்பு அல்லாஹ்தான் அவனை மனிதனாகப் படைத்துச் சீராக வடிவமைத்தான். பின்னர் அதிலிருந்தே, ஆண், பெண் ஆகிய இரு இணைகளை உருவாக்கினான். (இத்தகைய) இறைவன், இறந்தவரை மீண்டும் உயிர்ப்பிக்கும் ஆற்றல் உடையவன் இல்லையா? (ஸூரா - அல்கியாமா; பிரிவு: 2)

## ஒரு பார்வை - பகுதி 5

அல்லாஹ்வை நம்புவதும், நம்பாததும் மனிதனின் சுதந்திரமான விருப்பத்தில் அல்லாஹ் விட்டுவிட்டதைப் பற்றி ஸூரா அத்தஹ்ரு எடுத்துக்காட்டுகிறது. அவ்வாறு மனிதன் எடுக்கும் முடிவின் விளைவுகள் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. ஸூரா அல்முர்ஸலாத் மறுமை நாளின் யதார்த்தத்தை வலியுறுத்துகிறது. "அந்த நாளில் காஃபிர்களுக்கு கேடுதான்" என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தி கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் உண்மையை நிராகரிப்பவர்களுக்கு வலுவான எச்சரிக்கையும் விடப்படுகிறது.

## தராவிஹ் - 25: (ரக்அத் 17 முதல் 20)

### ஸூரா - 76, அல் இன்ஸான் / அத்தஹ்ரு; வசனம்: 1 - 31; பிரிவு: 1 - 2

1. மனிதனை ஒரு காலம் கடந்து செல்லவில்லையா? அதில் அவன் (பிறப்பதற்கு முன்பு) குறிப்பிட்டு சொல்லப்படும் ஒரு பொருளாகவே இருக்கவில்லை. (ஸூரா - அத்தஹ்ரு; பிரிவு: 1)

2. நிச்சயமாக மனிதனை (ஆண், பெண்) விந்து கலவையிலிருந்து நாம் படைத்தோம். அவனை நாம் பரிசோதிப்பதற்காகவே படைத்தோம். (ஸூரா - அத்தஹ்ரு; பிரிவு: 1)

3. அவனைக் கேட்பவனாகவும், பார்ப்பவனாகவும் ஆக்கினோம். நிச்சயமாக, நாம் அவனுக்கு (குர்ஆன் மற்றும் நபிகள் மூலமாக) நல்வழியைக் காண்பித்தோம். (ஸூரா - அத்தஹ்ரு; பிரிவு: 1)

4. அவன் ஒன்று நன்றியுள்ளவனாக இருக்கலாம், அல்லது நன்றி மறந்தவனாக இருக்கலாம். (அது அவனது விருப்பம்). (ஸூரா - அத்தஹ்ரு; பிரிவு: 1)

5. இறைமறுப்பாளர்களுக்குச் சங்கிலிகளையும், கட்டுகளையும், நரகத்தையும் நிச்சயமாக அல்லாஹ் தயார் செய்திருக்கின்றான். (ஸூரா - அத்தஹ்ரு; பிரிவு: 1)

6. நல்லோர்கள் சுவர்க்கத்தில் கிண்ணங்களில் அருந்துவார்கள். அதில் சுவர்க்கத்தின் கற்பூர பானம் கலந்திருக்கும். அது சுவர்க்கத்தின் ஓர் ஊற்றாகும். அதை அல்லாஹ்வின் நல்லடியார்கள் அருந்துவார்கள். அதை (அவர்கள் விரும்பும் இடங்களுக்கெல்லாம்) திருப்பிக் கொள்வார்கள். (ஸூரா - அத்தஹ்ரு; பிரிவு: 1)

7. சுவர்க்கத்திலுள்ள மரங்களின் நிழல்கள் அவர்கள் மீது படர்ந்திருக்கும். அவர்கள் பறித்துக்கொள்ள ஏதுவாக, கனிகள் தாழ்ந்திருக்கும். (ஸூரா - அத்தஹ்ரு; பிரிவு: 1)

8. பரப்பி வைக்கப்பட்ட முத்துக்களைப் போன்ற, என்றும் இளமை மாறாத சிறுவர்கள், அவர்களைச் சுற்றி சுற்றி வந்து சேவை செய்து கொண்டிருப்பார்கள். (ஸூரா - அத்தஹ்ரு; பிரிவு: 1)

9. சுவர்க்கத்தில் இருக்கும் அவர்கள் உயர் ரக பச்சைப் பட்டாடைகளை அணிந்திருப்பார்கள். அவர்கள் வெள்ளிக் காப்புகள் அணிந்திருப்பார்கள். அவர்களுடைய இறைவன் சுத்தமான பானத்தை அவர்களுக்கு அருந்தக் கொடுப்பான். (ஸூரா - அத்தஹ்ரு; பிரிவு: 1)

10. இறை நம்பிக்கையாளர்களே! இதுவே உங்களுக்கான வெகுமதியாகும். உங்களுடைய முயற்சி நன்றிபாராட்டத்தக்கது. (ஸூரா - அத்தஹ்ரு; பிரிவு: 1)

**ஸூரா - 77, அல்முர்ஸலாத்; வசனம்: 1 - 50; பிரிவு: 1 - 2**

11. தொடர்ச்சியாக அனுப்பப்படுகின்றவை (காற்றுகள்) மீது சத்தியமாக! இரைந்து வீசும் கடும் புயல் காற்றுக்களின் மீது

சத்தியமாக! மேகங்களைப் பரப்பக்கூடிய காற்றுகளின் மீது சத்தியமாக! (ஸூரா - அல்முர்ஸலாத்; பிரிவு: 1)

12. உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட (கியாமத்) நாள்) நிச்சயமாக வந்தே தீரும். (ஸூரா - அல்முர்ஸலாத்; பிரிவு: 1)

13. அந்நாளில் நட்சத்திரங்கள் ஒளியிழந்து விடும். வானம் பிளக்கப்படும். மற்றும், மலைகள் தூள்தூளாக்கப்படும். இறைத்தூதர்களுக்கு(த் தம் சமூகத்தாருக்காகச் சாட்சியம் கூற) நேரம் குறிக்கப்படும். (ஸூரா - அல்முர்ஸலாத்; பிரிவு: 1)

14. நம்ப மறுப்பவர்களுக்கு அந்நாளில் கேடுதான்! உங்களை (விந்து என்னும்) அற்பமான நீரிலிருந்து படைக்கவில்லையா? பிறகு அதை ஒரு குறிப்பிட்ட காலம் வரை பாதுகாப்பான கருவறையில் வைத்தோமே! (ஸூரா - அல்முர்ஸலாத்; பிரிவு: 1)

15. நம்ப மறுப்பவர்களுக்கு அந்நாளில் கேடுதான்! கியாமத் நாளில் பாவிகள் நரகின் மூன்று கிளைகள் கொண்ட புகையின் நிழலை நோக்கி நடப்பார்கள். அந்த நரகமானது பெரும் மாளிகையை போன்று தீப்பொறிகளை வீசி எறியும். (ஸூரா - அல்முர்ஸலாத்; பிரிவு: 1)

16. நம்ப மறுப்பவர்களுக்கு அந்நாளில் கேடுதான்! நீங்கள் உண்ணுங்கள்; இன்னும் கொஞ்ச (கால)ம் சுகம் அனுபவித்துக் கொள்ளுங்கள். நிச்சயமாக நீங்கள் குற்றவாளிகளே! (ஸூரா - அல்முர்ஸலாத்; பிரிவு: 2)

17. நம்ப மறுப்பவர்களுக்கு அந்நாளில் கேடுதான்! "அல்லாஹ்வுக்கு முன்னால் குனியுங்கள் (தொழுங்கள்)" என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டால், அவர்கள் குனியமாட்டார்கள். (ஸூரா - அல்முர்ஸலாத்; பிரிவு: 2)

18. நம்ப மறுப்பவர்களுக்கு அந்நாளில் கேடுதான்! இந்தக் குர்ஆனுக்கு பிறகு எந்த செய்தியின்மீது அவர்கள் நம்பிக்கை கொள்ளப் போகிறார்கள்? (ஸூரா - அல்முர்ஸலாத்; பிரிவு: 2)

---